

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி தி.மு.கழக வேட்பாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் சைதை மேற்கு பகுதி 139வது (அ) வட்டத்தில் வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். நெசவாளர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர் பி.நரேஷ்குமார் தலைமையில் இளைஞர்கள் படைசூழ அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை! ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிக் கழக அவைத் தலைவர்

# புவி. பாலாஜியின் புதல்வி பா.சங்கவி - வில்பிரட் ஜோசப் திருமண வரவேற்பு!

## அமைச்சர்கள் – கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஏப்.13-

மூத்த பத்திரிகையாளர் - (நினைவில் வாழும்) கே. கே.புவியரசுவின் பேத்தி - ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி தி.மு.க. அவைத் தலைவர் புவி பாலாஜியின் புதல்வி பா.சங்கவியின் திருமண வரவேற்பு விழா ஏப்.17 - வெள்ளிக்கிழமை அன்று மாலை நடைபெறுகிறது. கழக முன்னணியினர் பலரும் இவ்விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துகிறார்கள்.

இவ்விழா பற்றிய விவரம் வருமாறு:-

மூத்த பத்திரிகையாளர் (நினைவில் வாழும்) கே. கே.புவியரசுவின் பேத்தியும் - ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி தி.மு.க. அவைத் தலைவர் புவி. பாலாஜி - கு ரோஸ் மேரி ஆகியோரின் புதல்வியுமான பா.சங்கவி - பெரவள்ளூர் - எஸ்.ஆர். பி.காலனி வில்லியம் - ஜோஸ்பின் ஆகியோரின் புதல்வர் வில்பிரட் ஜோசப் ஆகியோரின் திருமண வரவேற்பு



விழா 17.4.2026 - வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி அளவில் சென்னை - 11, எஸ்.ஆர். பி. கோயில் (வடக்கு) பெரவள்ளூர், திரு.வி.க. நகர், பெரம்பூரில் அமைந்துள்ள "பெருந்தலைவர் கே.காமராஜ் திருமண மாளிகை"யில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு - சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் வினோத் வேலாயுதம், மா. பா. அன்புதுரை, மாவட்டப் பொருளாளர் ஜெ.எஸ். அகஸ்டின் பாபு, ஐ. கென்னடி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ப.கமலக்கண்ணன், என். பி. இதயாத் பாஷா, ஸ்டெர்லிங் மோகன், ரா.பொன்னம்மாள், மு.மோகன், வரதை த.பரி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

மண விழாவில் - துணை முதல்வர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் - அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோவி.செழியன் ஆகியோரும் - தயாநிதி மாறன் எம்.பி., மு.க. தமிழரசு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவர் அணிச் செயலாளர் டாக்டர் நா.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., எம்.கே. மோகன் எம்.எல்.ஏ., தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன், இறையன்பன் குத்தூஸ், டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு, பி.வில்சன் எம்.பி., ராஜா அன்பழகன், டாக்டர் கலை கதிரவன் மற்றும் நுங்கை வி.எஸ்.ராஜ், கோ.சு. மணி, எஸ்.மோகன், சைதை சாதிக், ரெட்சன் அம்பிகாபதி, எஸ்.எம்.கே. அண்ணாதுரை, து.விக்டர், ஆர்.என். துரை, வி.எஸ். கலை, ஏ.சங்கீதா, மாம்பலம் ஆ.சந்திரசேகர், கோடம்பாக்கம் மு. சத்யா கே.மலர், ந.இராமலிங்கம், எஸ்.மதன் மோகன், கே.ஏழுமலை, ஏ.ஆர்.பி.எம். காமராஜ், ச.பரமசிவம், நந்தனம் கி.மதி, எம்.டி.ஆர். நாதன், ஜெ.நற்குணநாதன், ந.ஜோஸ்டேனியல், ப.இராபர்ட், எஸ்.சுரேஷ்குமார், கராத்தே என்.ஆனந்த், வெற்றி செல்வி மாணிக்கம், வே.கமலா செழியன், எம். ஆறுமுகம், ஜி.டி.அம்பேத்கார், ஜெ.ஜானகிராமன், சா.தேவராசு, சு.வில்லவன் உள்பட பலரும் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளரும் மாண்புமிகு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். மூன்று கட்ட பரப்புரை முடிந்த நிலையில், நான்காம் கட்டமாக திருச்சியில் தொடங்கி பரப்புரை மேற்கொண்டு வருகிறார். அதன் விவரம் வருமாறு:

**13.4.2026 திங்கள்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | விழுப்புரம் | நான்கு முனை சாலை சிக்னல், விழுப்புரம். |
| காலை 10.45 மணி | திருக்கோவிலூர் | பேருந்து நிலையம் அருகில், திருக்கோவிலூர். |
| மாலை 4.00 மணி | செஞ்சி | நான்கு முனைச் சந்திப்பு, விழுப்புரம் சாலை, செஞ்சி. |
| மாலை 5.30 மணி | திண்டிவனம் | செஞ்சி சாலை, திண்டிவனம். |
| இரவு 7.00 மணி | செங்கல்பட்டு | இராட்டினம் கிணறு, செங்கல்பட்டு. |
| இரவு 9.00 மணி | ஆலந்தூர் | அண்ணா சிலை அருகில், ஸ்டேட் பேங்க் குடியிருப்பு, நங்கநல்லூர். |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை - 18
நாள் : 11.4.2026

கலைஞர் 100 1924 - 2023



### தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

# தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணியின் மாநிலத்தலைவர் ரெ.தங்கம் தேர்தல் பிரச்சாரம்!

சென்னை, ஏப்.13-

மாற்றுத் திறனாளிகள் மாநிலத் தலைவர் ரெ. தங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

13.04.2026 -காலை9.30 - திருக்குவளையில் இருந்து துவக்கம் - கீழ்வேளூர்

தோழர் டி.லதா சி.பி. எம்., 12.30 நண்பகல்-நாகப்பட்டினம்- ஜவஹிருல்லா ,4.30 மாலை-வேதாரண்யம்- மா.மி. புகழேந்தி, இரவு 8.30- பட்டுக்கோட்டை - அண்ணாதுரை,

14.04.2026 -காலை9.30 - பேராவூரணி - அசோக்குமார், நண்பகல் 12.30-ஒரத்தநாடு,- வைத்தியலிங்கம், மாலை5.00 - திருமயம்- எஸ்.ரகுபதி, இரவு 8.30- புதுக்கோட்டை-வை.முத்துராஜா,

15.04.2026-காலை 9.30- விராலிமலை - கே.



கே.செல்லபாண்டியன், நண்பகல் 12.30 - திருப்பத்தூர்- கே.ஆர்.பெரியகருப்பன், 5.00 மாலை - மானாமதுரை- தமிழரசி ரவிக்குமார், இரவு9.00 - முதுகுளத்தூர்- ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்

16.04.2026-காலை9.30 - இராமநாதபுரம்- காதர் பாட்சா (எ) முத்துராம லிங்கம்,

நண்பகல் 12.30-தூத்துக்குடி- கீதா ஜீவன், மாலை 5.00- தென்காசி-டாக்டர் கலை கதிரவன்,

17.04.2026-காலை9.30-போடிநாயக்கனூர்-ஓ.பன்னீர் செல்வம், நண்பகல்12.30

-திண்டுக்கல்-ஐ.பி.செந்தில்குமார், மாலை 5.00 - ஒட்டன்சத்திரம் - சக்கரபாணி,

இரவு 9.00 -கரூர்- எம். தியாகராஜன்

18.04.2026 -காலை 9.30 -அரவக்குறிச்சி -ஆர். இளங்கோ, நண்பகல் 12.30-

ராசிபுரம் - மதிவேந்தன், மாலை 5.00-காங்கேயம்-மு.பெ. சாமிநாதன், இரவு 8.00-

கிணத்துக்கடவு - சபரி கார்த்திகேயன், இரவு 9.00 - கோயம்புத்தூர் தெற்கு- செந்தில் பாலாஜி

19.04.2026-காலை9.30 - குன்னூர்- ராஜு, காலை 10.30 - பாப்பிரெட்டிப் பட்டி-

பழனியப்பன் , நண்பகல் 12.30 - பாலக்கோடு - செந்தில்குமார், மாலை 5.00-

ராணிப்பேட்டை - காந்தி, இரவு 8.00 - ரிஷிவந்தியம் - வசந்த் கார்த்திகேயன்,இரவு9.00 - கள்ளக்குறிச்சி-கே.மாலதி,

20.04.2026-காலை9.30 - திருச்சி மேற்கு -கே.என். நேரு, நண்பகல் - 12.30- திருவெறும்பூர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாலை 5.00 - மண்ணச்சநல்லூர் - கதிரவன்

21.04.2026 -காலை9.00 - கொளத்தூர்- முதல்வர் மு.க.ஸ்டாலின், காலை 11.00-துறைமுகம்- பி. கே.சேகர் பாபு, பிற்பகல் 12.30 - மயிலாப்பூர்- த. வேலு, மணி 2.30 - தி.நகர் - ராஜா அன்பழகன், மணி - 3.30 சோழிங்கநல்லூர் - அரவிந்த் ரமேஷ், மாலை 4.30 மணி - சேப்பாக்கம் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டா லின் ஆகியோரை ஆதரித்து தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்கிறேன்.

இவ்வாறு ரெ.தங்கம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# எஸ் .எஸ்.தென்னரசு 35 ஆவது ஆண்டு நினைவு நாள்!

## நினைவிடத்தில் - அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் அஞ்சலி!

சிவகங்கை, ஏப்.13-

ஒன்றுபட்ட ராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர், மண்டல அமைப்பு செயலாளர், திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் எஸ். எஸ்.தென்னரசு.தலைவர் கலைஞர் அவர்களால் சிறுகதை மன்னர் என்று அழைக்கப்பட்டவர்.

இவர் கடந்த 1989ம் ஆண்டு ஏப்ரல் 13ம்தேதி மரணம் அடைந்தார். அவரது நினைவுதினம் சிவகங்கை மாவட்ட தி.மு.க. மற்றும் எஸ்.எஸ்.தென்னரசு குடும்பத்தினர் சார்பில் ஆண்டுதோறும் ஏப்ரல் 13ம்தேதி அனுசரிக்கப்படுகிறது .இந்த ஆண்டு . 13ம்தேதி 35வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று காலை 9.00மணிஅளவில் அனுசரிக்கப்படுகிறது.


இன்று திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் திருப்பத்தூர் தானிப் பட்டியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் மலரஞ்சலி செலுத்தப்படுகிறது.

முன்னதாக திருக்கோஷ்டியூரில் உள்ள அவரது இல்லத்தில் தென்னரசு நினைவு படத்திற்கு அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் தென்னரசு படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.எஸ். தென்னரசு

**ஏப்ரல் 13 (1991)**



தென்மாவட்டங்களில் கழகம் வலிவுடன் வளர பெரிதும் காரணமானவரும், மூத்த தளபதிகளில் ஒருவராகவும் இருந்து கழகத்தை வழிநடத்திச் சென்ற ஆற்றலாளர்.

அண்ணாவால் அரவணைக்கப்பட்டு அரசியலில் நுழைந்து கலைஞரின் இதயத்தில் தனி இடம் பெற்றவர்.

சிறுகதை மன்னன், சின்னமருது என்றெல்லாம் அழைக்கப்பட்டவர்.

1949ல் கிளைச் செயலாளராக பொறுப்பேற்று, வட்டச் செயலாளராக வளர்ந்து, மாவட்டச் செயலாளராக உயர்ந்து, படிப்படியாக கழக அமைப்புகளின் நுணுக்கங்களை அனுபவ பூர்வமாக அறிந்த காரணத்தால், அமைப்புச் செயலாளர் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டவர்.

ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு, மாவட்டச் செயலாளராக 15 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

தி.மு.கழகத்தின் சிறைப் பறவையாக வாழ்ந்து காட்டியவர். 26 முறை கழகத்திற்காக சிறை சென்றவர். மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் இருந்தவர். அதேபோன்று 1965ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1989ஆம் ஆண்டு திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1990ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு அண்ணா விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### 'தமிழ் மாநில தேசிய லீக்' கட்சியின் பொதுச்செயலாளர் திருப்பூர் அல்தாப் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



**தலைமைக் கழக அறிவிப்பு**

| தேதி | சட்டமன்ற தொகுதி |
|---|---|
| 13-4-2026 | பாபநாசம் |
| 14-4-2026 | நன்னிலம் |
| 15-4-2026 | நாகப்பட்டினம் (நாகூர்) தஞ்சாவூர் |
| 16-4-2026 | திருச்சி |
| 17-4-2026 | மதுரை |
| 18-4-2026 | பாளையங்கோட்டை (மேலபாளையம்) |
| 19-4-2026 | தென்காசி |
| 20-4-2026 | வாணியம்பாடி, வேலூர், ஆம்பூர் |
| 21-4-2026 | இராயபுரம், துறைமுகம் |


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10-04-2026.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கூ. பால்ச்சாமி

**ஏப்ரல் 13 (2021)**



கழகம் துவங்கிய நாளிலிலேயே உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

காரியாபட்டி ஒன்றிய அவைத்தலைவர், ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

விருதுநகர் மாவட்ட கவுன்சிலராகவும், கூட்டுறவு நாணய சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, 1976ல் மிசா சட்டத்தில் ஓராண்டு சிறைவாசமும், 1984ல் சட்ட எரிப்பு போராட்டத்தில் நான்கு மாத சிறைவாசமும் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**